10 JUN 2009

சுருக்கம்

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் திருவொற்றியூர் நகராட்சிக்கு விரிவான குடிநீர் அபிவிருத்தி பணிகள் – ரூ.8511.70 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி2) துறை

அரசு ஆணை (2D) எண்.46 நாள் : 2.6.2009

படிக்கப்பட்டது :

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம்
எண்.608/JNN1/09, நாள் 12.1.2009

ஆணை :

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் திருவொற்றியூர் நகராட்சியில் மத்திய அரசின் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் நிதியுதவியுடன் ரூ.8511.70 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான குடிநீர் அபிவிருத்தி பணிகளுக்கான திட்டத்தை செயல்படுத்துவதற்கான கருத்துருவினை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

2. மேற்காணும் பொருள் குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர் தனது கடிதத்தில், திருவொற்றியூர் நகராட்சி பகுதியில் குடிநீர் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, முகவாமைப்பான தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் மூலம், மத்திய அரசின் நகர்ப்புர வளர்ச்சித்துறையின் மத்திய திட்ட அனுமதி வழங்குதல் மற்றும் கண்காணிக்கும் குழுவின் 21.11.2008 அன்று நடைபெற்ற கூட்டத்தில் (Central Sanctioning and Monitoring Committee) ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார். அக்கூட்டத்தில், இவ்விரிவான திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. மேலும் மத்திய திட்ட அனுமதி வழங்குதல் மற்றும் கண்காணிக்கும் குழுவின் ஒப்புதலின் அடிப்படையில், முகவாமைப்பான தமிழ்நாடு நகர்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், இத்திட்டத்திற்கு கடன் மற்றும் மான்யத்திற்கு அனுமதி அளித்து, நிர்வாக அனுமதி பெறுமாறு கோரியுள்ளது.

3. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர், தனது கடிதத்தில், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 8511.70 இலட்சம் மதிப்பீட்டில் திருவொற்றியூர் நகராட்சி பகுதியில் குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகளுக்கான விரிவான திட்ட மதிப்பீட்டை செயல்படுத்தக் கோரியுள்ளார்.

4. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள், தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பானது அளித்துள்ள கடன் மான்யம் ஒப்புதல் கடிதத்தில் கீழ்கண்ட விபரம் அளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண். | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | ஜவஹர்லால் நேரு நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் (மொத்த மதிப்பீட்டில் 50% நிதி நிறுவனத்தின் பங்கு) | | கடனை திருப்பி செலுத்தும் காலம் | நிதிநிறுவனத்தின் பங்கு/ நகராட்சி –யின் சொந்த பங்கு |
|---|---|---|---|---|---|---|
| | | | வட்டியில்லா கடன் 10% வீதம் | மான்யம் 40 % | | |
| 1 | திருவொற்றியூர் நகராட்சி குடிநீர் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள | 8511.70 | 851.17 | 3404.68 | 7 வருடங்கள் | 4255.85 |

5. எனவே, திருவொற்றியூர் நகராட்சியில், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ.8511.70 இலட்சம் மதிப்பீட்டில் திருவொற்றியூர் நகராட்சி பகுதியில் விரிவான குடிநீர் அபிவிருத்தி பணிகளை செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

6) மேலே பத்தி 5–ல் உள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து திருவொற்றியூர் நகராட்சிக்கு மத்திய அரசின் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ.8511.70 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகளை செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

/ ஆளுநரின் ஆணைப்படி /

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –5.
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வளர்ச்சி கழகம், சென்னை–35.
மண்டல நிர்வாக இயக்குநர், செங்கல்பட்டு.
ஆணையர் திருவொற்றியூர் நகராட்சி, சென்னை.
மாநில கணக்காயர், சென்னை–18.
மாநில கணக்காயர் (தணிக்கை) சென்னை -9
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை -9

இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, குறளகம், சென்னை –108.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளரின்
தனிச் செயலர், சென்னை –9.
நகல்
நிதி(நநிமகுவ) துறை, சென்னை –9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்
(வரவு செலவு /ஆ.2) துறை, சென்னை –9
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்.